# தொழிற் முன்னேற்ற பாதை

# மெக்கானிக் ஆட்டோபாடி ரிப்பேர்



## ஐடிஐ-யில் பயிற்றுவிக்கப்படும் திறன்கள்:

- வாகன தயாரிப்பு பற்றிய விவரக்குறிப்பு பட்டியல் மற்றும் வாகன அடையாள எண் சரிபார்த்து விளக்கவும் மற்றும் பழுது பார்க்கும் நிலையத்தில் உள்ள பல்வேறு உபகரணங்களை இயக்க செய்யும் பயிற்சி
- வாகனத்தில் ஏற்பட்டுள்ள சேதத்தை மதிப்பீடு செய்து பழுது பார்க்கும் பயிற்சி, மாற்று தேவைகளை அடையாளம் காணும் பயிற்சி, வெல்டிங் மற்றும் பிளாஸ்மா கட்டிங் கருவிகளை முறையாக கையாளும் பயிற்சி
- வாகனத்தின் பாகங்களான கண்ணாடி பொருத்துதல், கதவு பொருத்துதல் போன்றவற்றில் ஏற்படும் குறைபாடுகளை சரிசெய்யும் பயிற்சி
- விபத்து மூலம் ஏற்படும் கட்டமைப்பு சேதத்தின் இருப்பிடம் மற்றும் அளவு அடையாளம் காணும் பயிற்சி
- வாகனத்தின் பிரேம் அமைப்பை நேராக்க உதவும் உபகரணங்கள் மற்றும் மறுசீரமைப்பு செய்யும் பயிற்சி. மேலும் கட்டமைப்பு ஒருமைப்பாடு மற்றும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பயிற்சி

## தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள்:

- சர்வீஸ் மேனுவல்படி வாகனத்தை சர்வீஸ் செய்தல்
- சேதமடைந்த பாகங்கள் சரியான முறையில் கணித்தல்
- டூல்ஸ் மற்றும் உபகரணங்களை கையாளும் திறன் பெற்றிருத்தல்
- சரியான முறையிலும், குறித்த நேரத்திலும் வேலையினை செய்து முடித்தல்



## ஐடிஐ முடித்தபின் வேலைவாய்ப்புகள்:

- ஆட்டோமொபைல் சர்வீஸ் சென்டர்
- பணிமனை உதவியாளராக ஐ.டி.ஐ மற்றும் பொறியியல் கல்லூரி பணிமனைகளில்
- மத்திய அரசின் ரயில்வே, மாநில அரசின் டிரான்ஸ்போர்ட் கார்ப்ரேஷன், அரசு தானியங்கி பணிமனைகள்
- சிறிய, நடுத்தர தொழில் நிறுவனங்கள்



## ஐடிஐ முடித்தபின் என்னவாகலாம்:

### ஆரம்ப நிலை

செமி ஸ்கில்டு டெக்னீசியன், ஹெல்பர், பணிமனை உதவியாளர்

### இடை நிலை

ஸ்கில்டு டெக்னீசியன், இளநிலை பயிற்சி அலுவலர் / உதவி பயிற்சி அலுவலர்

### மூத்த நிலை

மேனேஜர், தொழில் முனைவோர், பயிற்சி அலுவலர், சுயதொழில்



## ஐடிஐ முடித்தபின் என்ன படிக்கலாம்:

- தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநராக சேர்ந்து தேசிய தொழிற்பழகுநர் (NAC) சான்றிதழ் பெறுதல்
- லேட்ரல் என்ட்ரி மூலம் டிப்ளமோ படிப்பில் சேரலாம்
- கைவினை பயிற்றுவிப்பாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு பயிற்சியில் பங்கு பெற்று ஐடிஐ-ல் பயிற்றுநராக பணியாற்றலாம்.